# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 18.06.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

லாஹுரின் ஷஹீதுகளைப் பற்றிய சொற்பொழிவு தொடர்கிறது. இன்னும் சில ஷஹீதுகளைப் பற்றி இப்போது கூறுகிறேன்.

**அப்துர் ரஷீத் மலக் சாஹிப் -ஹீது**. இவர் அப்துல் ஹமீது மலக் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் லாலாமூஸா பகுதியைச் சார்ந்தவர். இவரது தந்தை வழிப்பாட்டனார் ஹஸ்ரத் மவ்லவி மெஹர்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய 313 சஹாபாக்களில் ஒருவர் ஆவார்.

ஷஹாதத்தின் போது ஷஹீதின் வயது 64. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தார். மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் செயல் திறனுள்ள உறுப்பினராவார். வஸாயா செயலர் மற்றும் தஃலீமுல் குர்ஆன் செயலராகவும் இருந்தார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது. பொதுவாக கடக்ஹவுஸில் பகுதியில் ஜுமுஆ தொழுது வருபவராக இருந்தார். நீண்ட காலத்திற்குப் பிறகு இன்றுதான் தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆவுக்காக சென்றார். அல்லாஹ் அவருக்கு ஷஹாதத்தின் பதவி தரவிருந்தான். ஜுமுஆவுக்கு செல்வதற்கு முன், அவ்வப்போது பெரிய மஸ்ஜிதுகளில் ஜுமுஆ தொழ வேண்டும் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நான் தாருஸ் ஸிக்ரில் இன்று ஜுமுஆ தொழ போகிறேன் என்று தமது மனைவியிடம் கூறினார். மெயின் ஹாலில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். சுடுவதற்கு முன் வீட்டுக்கு போன் செய்து எனது காலில் குண்டடிபட்டுள்ளது என்று கூறினார். இவர் போனில் பேசிக் கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததாக மனைவி கூறுகிறார். வேறொருவரின் போனிலிருந்து பேசினார். பிறகு தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. நான் இவரது ஷஹாதத்தின் மீது பொறுமை செய்தவாறு இறை திருப்தியில் திருப்தி அடைகிறேன் என்று இவரது மனைவி கூறினார்கள்.

அல்லாஹ் முழு ஜமாஅத்திற்கும் உதவியாளனாக இருப்பானாக! ஜமாஅத்திற்கு பெரும் முன்னேற்றங்களைத் தருவானாக! என்றும் . இவரும் லஜ்னாவின் தொண்டராக இருந்தார். இவர் ஒரு தந்தை என்ற முறையில் குழந்தைகளிடம் மிகவும் பரிவு காட்டுபவராக இருந்தார். மூன்று மகள்கள் உள்ளனர். மகன் இல்லை என்று ஒருபோதும் வருத்தத்தை வெளிக்காட்டியதில்லை. மகள்கள் மீது மிகவும் கவனம் செலுத்துவார். மார்க்க மற்றும் உலகக் கல்வியில் எப்போதும் முன்னணியில் இருக்கும்படி குழந்தைகளை வளர்த்து வந்தார். மூன்று குழந்தைகளிடமும் சமமாக நடந்து கொள்வார். புதிதாக பைஅத் செய்த ஒரு சிறுமி இவரிடம் பணிக்காக வந்திருந்தாள். அவளிடமும் தப்லீக் செய்ததில் அவள் பைஅத் செய்துள்ளார். அச்சிறுமியையும் இவரே பராமரித்து திருமணம் செய்து வைக்கும் ஏற்பாடும் செய்தார். நல்லியல்பு கொண்டவர்; துஆ செய்பவர்; இறையச்சம் உள்ளவர்; பழகுவதற்கு எளியவர்; கட்டுப்பாடுள்ளவர்; அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக!

**முஹம்மது ரஷீத் ஹாஷ்மி சாஹிப் ஷஹீது.** இவர் முனீர் ஷாஹ் ஹாஷ்மி சாஹிபின் மகன் ஆவார். ரஷீத் ஹாஷ்மி சாஹிப் ஷாஹ் தீன் சாஹிப் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சஹாபியின் கொள்ளுப் பேரனாக இருந்தார். ஷஹீதின் தந்தையார் முஹம்மத் முனீர் ஷாஹ் ஹாஸிமி சாஹிப் **Chief PostMaster** ஆக இருந்தார். 1974 –ல் நடந்த (ஜமாத்திற்கு எதிரான) கலவரத்தில் அவரது வீட்டை எதிரிகள் எரித்து விட்டனர். பாகிஸ்தானிலுள்ள பெஷாவரில் ரேடியோ நிலையத்தில் பணி செய்தார். செய்திகள் வாசிப்பவராக இருந்தார். பத்திரிகையில் கட்டுரைகளும் எழுதி வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 78. மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் சேவகர். 14 வருடங்கள் வரை ஹல்கா (கிளை) சதர்

ஆக இருந்தார். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். இவரது ஷஹாதத் லாஹுரில் தாருஸ் ஸிக்ரில் நடந்தது. 3 குண்டுகள் இவர் மீது பட்டிருந்தது.

நல்ல அன்பு கொண்டவர். ஜமாஅத்தின் மீது அக்கரை கொண்டவர். மார்க்கத் தொண்டாற்றும் ஆர்வம் உள்ளவர். மனைவி மக்களுக்கும் இதனையே போதித்து வந்தார். ஜுமுஆ நாளில் சதர் சாஹிபிற்கு போன் செய்து என்னிடம் ஜமாஅத் அமானிதம் உள்ளது. அதனை வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்றார். ஷஹாதத்தின் போது அந்த அமானித தொகை அவரது சட்டைப் பையில் இருந்தது. குண்டடி பட்டதில் பணமும் சேதமடைந்திருந்தது. நேரத்தைப் பேணுபவர். லாஹுரில் ஒரு பகுதியில் தொழுகை மையம் அமைக்க அப்பகுதியில் சதர் சாஹிப் விரும்பியிருந்தார். பிளான் அப்ரூவல் கிடைக்கவில்லை. இரவோடு இரவாக இவர் பிளான் தயார் செய்து அனுமதி வாங்கினார். அஹ்மதியல்லாதவர்களும் இவருக்கு மரியாதை செலுத்தினர். முஹல்லாவாசிகள் முழுவதும் இரங்கலுக்காக அவரது வீட்டிற்கு வந்தனர். நல்ல வீரர். தமது ஹல்காவை ஜமாஅத்ரீதியாக மிகவும் நல்ல நிலையில் வைத்திருந்தார். இவரைப் பற்றி எனக்கு அதாவுல் காதிர் தாஹிர் சாஹிப் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, இவர் பழகுவதற்கு எளியவர். திருக்குர்ஆன் ஓதக்கூடியவர். உடல் பலவீனமாக இருந்தார். தலைமைப் பொறுப்பை ஏற்க இயலவில்லை என்று தெரிவித்திருந்தும் ஜமாஅத் பணிகளுக்கு எப்போதும் தயாராக இருந்தார். கிலாஃபத்துடன் நல்ல பிரியம் கொண்டவர். சந்தாக்களில் நல்ல முறையில் பங்கெடுப்பார்.

**மதிப்பிற்குரிய ஸஃபர் அஹ்மத் சாஹிப் ஷஹீத்.** இவர் மவ்லானா இப்ராஹீம் சாஹிப் காதியானி தர்வேஷின் மகன் ஆவார். ஷஹீதின் மாமனார் ஹஸ்ரத் மியான் இல்முத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாவார். இவரது தந்தையார் காதியான் இஸ்லாஹ்-வ -இர்ஷாதின் முன்னாள் நாஸிர் ஆவார். இவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருக்கும் வாய்ப்பு பெற்றிருந்தார். ஷஹீது மர்ஹூம் தமது ஹல்காவின் இமாமுஸ் ஸலாத் ஆக இருந்தார். தரம்பூரா பகுதியில் மிக நீண்ட காலமாக பொருளாளராக செயலாற்றி வந்தார்கள். ஷஹாதத்தின் போது அவரது வயது 73. இவரது ஷஹாதத்தும் தாருஸ் ஸிக்ரில் தான் நடந்தது. தினமும் தாருஸ் ஸிக்ரில்தான் தொழுது வந்தார். சம்பவ தினத்தில் ஜுமுஆ தொழுவதற்காக வீட்டிலிருந்து 12 மணி அளவில் வெளியில் வந்தார். அவரது மகன் மார்டன் டவுணில் உள்ள பைத்துந்நூருக்கு சென்றார். மாலை 6 மணிக்கு தான் ஸஃபர் சாஹிப் ஷஹீது ஆனது தெரிந்தது. பிரேத அறையில் இவரது உடல் கிடைத்தது. 5 குண்டுகள் பாய்ந்திருந்தன. குண்டடிபட்ட நிலையில் அருகில் கண்டவர்கள் கூறினார்கள். தரூது ஓதிக் கொண்டிருந்தார். அருகில் இருந்தவர்களையும் தரூது ஓதுமாறு கூறினார். தரூது ஓதுங்கள்; இஸ்திக்ஃபார் செய்யுங்கள் என்று கூறினார்.

இவரது மனைவி கூறுகிறார்: முஸஃப்பர் சாஹிப் சிறு வயதிலேயே தஹஜ்ஜுத் தொழும் பழக்கம் உடையவராக இருந்தார். தஹஜ்ஜுத் தொழுகையை விடவே மாட்டார். குழந்தைகளுக்கும் இதனையே போதித்து வந்தார். உரத்த குரலில் திலாவத் செய்து வந்தார். அதுமட்டுமின்றி ஐவேளை தொழுகைக்குப் பிறகு திருக்குர்ஆன் ஓதி வந்தார்.

சில நாட்களுக்கு முன்பிருந்து, சில நாட்கள் விட்டுவிட்டு தொடர்ந்து நோன்பு வைத்து வந்தார். ஒவ்வொருவரிடமும் எனக்காக துஆ செய்யுங்கள். எனது முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எல்லா பொறுப்புகளையும் நிறைவேற்றி வந்தார். பொய் சொல்லமாட்டார்; பொய் சொல்வதை சகிக்கவுமாட்டார். அல்லாஹ் இவருக்கு ஷஹாதத்தின் பதவியை வழங்கினான். தமக்கு நல்ல முடிவைத் தருவதற்காக மற்றவர்களிடம் அவர் துஆ செய்யுமாறு வேண்டினார். அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டான்.

இவரது சகோதரி காதியானில் வசிக்கிறார். நாஸிர் அஃலா சாஹிபின் மனைவி ஆவார். இவரும் எழுதியுள்ளார்: இவர் நல்ல சகோதர மனப்பான்மை உடையவர். சகோதரிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்பவராவார்.

இவரது பெரிய மகள் கூறுகிறார்: எனது மாமாவின் மகள் ரப்வாவில் திருமணமாகி இருக்கிறார். அவரது வீட்டிற்கு சென்ற போது கிலாஃபத் ஜுப்ளி உறுதிமொழி நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இவர் எழுந்து நின்று அவ்வாசகத்தை திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார். அறையில் வேறு எவரும் இல்லாதது போன்றும் , இவரையே திரும்ப கூறச் சொல்லப்பட்டதும் போன்று சொல்லிக் கொண்டிருந்தார். இவ்வாறு இருமுறை நடந்தது. 1980-ல் ஹஜ் செய்வதற்கான வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

**மதிப்பிற்குரிய மியான் முபஷ்ஷிர் அஹ்மத் ஷஹீத்.** இவர் மியான் பரக்கத் அலி சாஹிபின் மகன் ஆவார். ஷஹீதின் தந்தையாரான மியான் பரக்கத் அலி சாஹிப் 1928-ல் பைஅத் செய்தவர் ஆவார். தஹ்ரீகே ஜதீதின் 5000 முஜாஹிதீன்களில் ஒருவர்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான மியான் நூருத்தீன் (ரலி) அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர். காரியான் என்ற குஜராத் மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்க்காரர். பிறகு 2008 -ல் லாஹூருக்கு குடிபெயர்ந்தார். முதலில் இவர்கள் வஸீராபாத்தில் இருந்தார். Coco Cola விநியோகம் செய்யும் தொழில் செய்து வந்தார். 1974-ல் அத்தொழில் நின்றுபோனது. எதிரிகள் (அப்போது நடந்த கலவரத்தில்) எல்லா சாமான்களையும் சூரையாடி உடைத்து விட்டனர். பெரும் பிரச்சனையை இவர் சந்திக்க நேர்ந்தது. இவர் ஜமாஅத்தின் தலைமையகத்திற்கு கடிதம் ஒன்றைக் கொடுத்து விட்டு வஸீராபாத்திற்கு போய்க் கொண்டிருந்த போது சிலர் இவரை காரிலிருந்து கீழிறக்க முயன்றனர். இவர் மிர்ஸாயி இவரைக் கொல்லுங்கள் என்று கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் டிரைவர் நிற்காமல் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்று விட்டதால் இவருக்கு எதுவும் ஆகவில்லை. பிறகு குஜ்ரான்வாலா சென்றடைந்த பிறகும் அங்கும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. எப்படியோ நள்ளிரவில் வீடு வந்து சேர்ந்து விட்டார். அந்நாள்களில் நிலைமை மிகப் பயங்கரமாக இருந்தது. தலைமையகத்தோடு தொடர்பு கொள்ள வருவதற்கு கூட மிகவும் சிரமம் மேற்கொண்டு பல தியாகங்களைச் செய்துதான் வர வேண்டி இருந்தது.

குர்பானிக்காக எப்போதும் இவர் தயாராக இருந்தார். பிறகு 1998-ல் Coco Cola விநியோகம் செய்யும் பணியை இவர் தொடங்கிய போது, இவரது பொருளின் தரம் எப்போதும் சுத்தமாக இருக்கும். பாகிஸ்தானில் அனைத்துப் பொருள்களிலும் கலப்படம் அதிகம் கலந்திருக்கும். இவரிடமும் கலப்படம் செய்பவர்கள் ஆலோசனை கூறியவாறு, நாங்கள் சொல்கிறபடி செய்தால் உங்களுக்கு பன்மடங்கு இலாபம் கிடைக்கும். கோடீஸ்வரர் ஆகிவிடலாம் என்று கூறினார்கள். ஆனால் ஷஹீது அவர்கள் அவர்களது ஆலோசனையை ஒருபோதும் ஏற்கவில்லை; அதனைப் பற்றி சிந்திக்கவும் இல்லை. இவ்வாறு யோசனை சொல்ல வருபவர்களை நன்றாக உபசரித்து, மிகவும் மரியாதையுடன் நீங்கள் தவறான இடத்திற்கு வந்து விட்டீர்கள் என்று கூறி அனுப்பி விடுவார்.

வஸீராபாத் பகுதியல் ஆறு ஆண்டுகளாக அமீராக இருந்தார். இவரது மகன் கமர் அஹ்மத் சாஹிப் முரப்பி(கொள்கைப் பரப்புநர்) யாக பெனினில் இருக்கிறார். ஷஹாதத்தின் போது இவரது வயது 65. வஸிய்யத் செய்தவர். இவரது ஷஹாதத் மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் நடந்தது. தாக்குதல் நடந்த போது இவர் தமது இடத்திலேயே அமர்ந்திருந்தார். மெஹ்ராபுக்கு அருகில் கிரானைட் வெடித்ததில் காயமுற்றார். கழுத்தின் இடதுபுறம் கிரானைட் குண்டு பட்டதில் காயமுற்றார். கணிசமான இரத்தம் வெளியேறியது. தனது சகோதரரின் மகனுக்கு போன் செய்து, மகனே, நான் காயமுற்றுள்ளேன். 5 குண்டுகள் எனது உடம்பில் பாய்ந்துள்ளன என்று கூறினார்.

மிகவும் மென்மையானவர். ஒவ்வொருவரிடமும் பரிவு, அன்பு காட்டுபவர். துஆ செய்பவர். ஒருவருக்கு கஷ்டம் என்றால் உடனே அவருக்காக துஆ செய்யத் தொடங்கி விடுவார்.

இவரது மனைவி கூறுகிறார்: இவருடன் திருமணமாகி எனக்கு 39 வருடங்கள் ஆகி விட்டது. ஒருபோதும் சலிப்பான ஓசையை எழுப்பியதில்லை. நான் ஏதாவது கூறினாலும் துஆ செய் என்று கூறுவார். நானும் இவ்விஷயத்தில் துஆ செய்கிறேன் என்று கூறுவார். குழந்தைகளின் மீது நல்ல பரிவு காட்டுபவர். வீட்டில் புறம் பேசுவதை செவியுற்றால் அதிருப்தி அடைந்தவாறு தடுத்து விடுவார்.

குஜ்ரான்வாலாவில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார். வீட்டு சொந்தக்காரர் அஹ்மதி அல்லாதவர். ஷஹீது மர்ஹூம் குறித்து வீட்டு சொந்தக்காரியான அந்தப் பெண் கூறுகிறார்: இவர் மிகவும் நல்லவர். என் வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்தார். அது எனது பாக்கியமாகும். எனது குழந்தைகளையும் இவரைப் போன்ற நல்ல மனிதராக அல்லாஹ் ஆக்க வேண்டும் என்று துஆ செய்கிறேன். சகோதரரே! எனது குழந்தைகளுக்கும் நீங்களே தர்பிய்யத் கொடுங்கள் என்று கூறுவதும் உண்டு.

நல்ல தொழில் செய்பவர்.தொழிலாளிகளோடு நல்ல முறையல் நடந்து கொள்வார். உணவு விஷயத்தில் எப்போதும் குறித்த நேரத்தில் அவர்களை விடுவிப்பதில் கவனமாக இருப்பார். தப்லீகும் செய்து வந்தார். அவரது மனைவி இவரைப் பற்றி குறிப்பிடும் போது எப்போதும் நான் ஒரு தகுதியில்லாதவன். அல்லாஹ் எனக்கு கருணையின் மதிப்பெண் வழங்கி, நான் தேர்ச்சி பெற்றுவிட வேண்டும் என்று கூறிவருவார்.

ஆனால் இப்போது அவருக்கு நூற்றுக் நூறு மதிப்பெண்கள் வழங்கி ஷஹாதத்தின் பதவியை வழங்கி விட்டான்.

**ஃபிதா ஹுஸைன் சாஹிப் ஷஹீது.** இவர் பஹதூர் கான் சாஹிபின் மகன் ஆவார். இவர் காரியான் என்ற குஜராத் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அங்குதான் பிறந்தார். நான்கு வயதானபோது இவரது தாயும் தந்தையும் ஒரு மாத இடைவெளியில் மரணித்து விட்டனர். இவர் மியான் முபஷ்ஷிர் அஹ்மத் என்ற முன்னர் கூறப்பட்ட ஷஹீதின் உறவினர் ஆவார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்ததால் மியான் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிபின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். திருமணம் ஆகவில்லை. இவரது வயது ஷஹாதத்தின் போது 69. தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தைப் பெற்றார். ஜுமுஆவின் போது பள்ளி வளாகத்தில் நாற்காலியல் உட்கார்ந்து தொழுது வந்தார். சற்று ஊனமுற்றவர். ஆனால் சம்பவத்தன்று மஸ்ஜிதில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். தீவிரவாதிகள் சுட்ட போது இவருக்கு 35 குண்டுகள் பாய்ந்தன. அந்த இடத்திலேயே ஷஹீது ஆகி விட்டார். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக.

**காவர் அய்யூப் சாஹிப் ஷஹீத்.** இவர் முஹம்மத் அய்யூப் கான் சாஹிபின் மகன் ஆவார். இவரது குடும்பம் கில்கித் பகுதியைச் சார்ந்தது. இவரது பிறப்பு சர்கோதாவில் நடந்தது. 10வது வரை அங்கு படித்து விட்டு லாஹூர் வந்துவிட்டார். 1978 வரை வாப்டா பகுதியில் பணியைத் தொடங்கினார். அப்போது அக்கவுண்ட் பட்ஜெட் ஆபீசராக இருந்தார். 1984 -ல் பைஅத் செய்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 50. அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்துள்ளார். வக்ஃபே நவ் செயலராக இருந்தார். மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் முன்னாள் காயித் ஆவார். இவரது ஷஹாதத் தாருஸ் ஸிக்ரில் நடந்தது. கொஞ்சம் காலமாக தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆ தொழுது வந்தார். சம்பவ தினத்தன்று வேலை செய்யும் இடத்திலிருந்து ஜுமுஆவுக்கு வந்து மெயின் ஹாலில் அமர்ந்திருந்தார். இரண்டு குண்டுகள் பட்டிருந்தன. ஒன்று இதயத்திற்கு அருகில். இன்னொருன்று கால் முட்டியில் பட்டிருந்தது. மதியம் 2.15 மணிக்கு வீட்டுக்கு போன் செய்து தீவிரவாதிகள் வந்துள்ளனர். அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன துஆ செய்யுங்கள் என்றார். பிறகு மனைவி தொடர்பு கொண்டவாறு இருந்தார். மூன்றாவது முறை தொடர்பு கொண்டபோது எல்லாரும் துஆ செய்யுங்கள் என்று கூறிவிட்டு ஷஹீதாகி விட்டார்.

மனைவி கூறுகிறார்: ஜமாஅத்துடன் தொழுபவர். மிகவும் நல்ல மனிதர். மக்களும் இவரைப் பற்றி இதையே கூறுகின்றனர். நிர்வாகத் திறமை உள்ளவர். குழந்தைகளை நல்ல முறையில் பயிற்சி செய்தார். அடியார்களுக்குரிய கடமையை நல்ல முறையில் நிறைவேற்றுபவர். கிலாஃபத்துடன் விசுவாசமுள்ளவர். காவர் அய்யூப் கான் சாஹிப் பற்றி இல்யாஸ் கான் சாஹிப் குறிப்பிடுகிறார்: காவர் அய்யூப் சாஹிப் 1980 -ல் B.A.படித்த பிறகு வாப்டாவில் வேலை கிடைத்திருந்தது. பிறகு இவர் ரஹ்மான்பூர் வந்தார். எங்கள் வீடு எப்போதும் அஹ்மதி சுற்றுச் சூழலுடன் இருக்கும். காவர் அய்யூப் சாஹிப் எங்களுள் ஒருவர் ஆகிவிட்டார்.ஆனால் அப்போது அஹ்மதியாகவில்லை. அஹ்மதிகளின் போதனையைக் கேட்டு மவ்லவிகளின் ஆட்சேபனைகளைப் போன்றே அவரும் ஆரம்பத்தில் ஆட்சேபனைகளை செய்து வந்தார். நாங்களும் கேள்வி கேளுங்கள் என்று கூறினோம். நிறைய கேள்விகள் கேட்பார். ஒருநாள் நமது முபல்லிக் பரக்கத்துல்லாஹ் மர்ஹூம் அவர்கள் கேள்வி பதில் கூட்டம் நடத்தினார்கள். காவர் சாஹிப் அதிகமாக கேள்வி கேட்பதில் பிரபல்யமானவர் என்பதால் அந்த சபையில் அவரைக் குறித்து காவர் சாஹிப், ஏதாவது கேள்வி

கேளுங்கள் என்று நமது மவ்லவி சாஹிப் கூறிய போது, இப்போது என்னிடம் எந்த கேள்வியும் இல்லை என்று கூறினார். அதற்கு சில காலத்திற்குப் பிறகு பைஅத் செய்தார். அவரது உறவினர் கூறுகிறார்: அதற்குப் பிறகு நாங்கள் அவரிடம் அவரது எண்ணத்தை தெரிந்து கொள்வதற்காக பேசத் தொடங்கியபோது, எனக்கு பைஅத் செய்ய வாய்ப்பு கொடுங்கள். இதற்கு மேல் எனக்கு பைஅத் செய்ய வாய்ப்புத் தராவிட்டால் நான் ஹுஸூரிடம் முறையிடுவேன் என்று கூறி எங்கள் வாயை அடைத்து விட்டார். பிறகு பைஅத் செய்தார். அதன் பிறகு நன்மையிலும் ஆன்மீகத்திலும் இறை அருளால் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றார்.

**மதிப்பிற்குரிய சேக் முஹம்மத் யூனுஸ் சாஹிப் ஷஹீத்.** இவர் மதிப்பிற்குரிய சேக் ஜமீல் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். சேக் யூனுஸ் சாஹிப் மர்ஹூம் 1947 -ல் இந்தியாவில் அம்ரூஹா என்ற இடத்தில் பிறந்தவர். 1950 -ல் காதியான் சென்றார். பிறகு 1955 -ல் ரப்வா வந்து விட்டார். இவரது தந்தை சேக் ஜமீல் அஹ்மத் சாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கிலாஃபத்தில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தவர். காதியான் தர்வேஷ்களுள் ஒருவர் ஷஹீத் மர்ஹூம் ரப்வாவில் மெட்ரிக் முடித்திருந்தார். பிறகு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சேவகராக இருந்தார். 2007 -ல் ஓய்வு பெற்றார். பிறகு லாஹூரிலிருந்த மகனிடம் போய் இருந்து கொண்டார். இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலர், தஃவத்தே இலல்லாஹ் செயலர் போன்ற பணிகள் செய்தார். இவரது வயது ஷஹாதத்தின் போது வயது 63. பைத்துந்நூர் மார்டன் டவுனில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவர். விரைவிலேயே ஜுமுஆவுக்காக பள்ளிக்கு வருவது இவரது வழக்கம். மஸ்ஜித் நூரில் 11 மணிக்கு ஜுமுஆவுக்கு வந்தார். முதல் வரிசையில் அமர்ந்திருந்தார். அவரது மகன் இன்னொரு ஹாலில் இருந்தார். முதல் வரிசையில் முதன்முதலாக காயமுற்று வீழ்ந்து காணப்பட்டார். இவரது தலையிலும் மார்பிலும் குண்டடிபட்டது. ஷஹாதத் ஏற்பட்டது. சேக் சாஹிப் ஒரு கனவில், ரப்வாவில் ஓர் அழகிய பாதை - அழகிய விரிப்பு விரிக்கப்பட்டுள்ளது. பெரும் பெரும் ஆசனங்களில் கலீஃபாக்களும் அமர்ந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் உயர்வான ஓர் ஆசனத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். (சேக் சாஹிபாகிய) நானும் இரு கால் முட்டிகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறேன் என்று கண்டதாக கூறியுள்ளார்.

ஐவேளை தொழுகையில் பேணுதல் உள்ளவர். நோயுற்ற நிலையிலும் கடும் வெயிலிலும் பணியிலும் பள்ளிக்கு சென்று தொழுபவராக இருந்தார். நன்றி செலுத்தும் சந்தர்ப்பங்களிலும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறும் போது கூட இவரது கண்கள் குளமாகிவிடும்.. இறைவன் மீது அதிகமான தவக்குல் இருந்தது. வெளிப்படையான சாத்தியமில்லாத வேளையிலும் இறையருளால் சாத்தியமாகி விடும் என்று கூறுவார். தஹஜ்ஜுத் தொழுபவராகவும் நன்றியுணர்வுமிக்கவராகவும் மற்றவர்களை கவனத்தில் கொள்பவராகவும் எளிமையான வாழ்க்கை வாழ்பவராகவும் விளங்கினார். பல நல்ல கட்டுரைகளை எழுதியுள்ளார். தஃவத்தே இலல்லாஹ் - இறைவழியில் அழைப்பதில் ஆர்வம் உள்ளவர்.

இவரது மனைவி கூறுகிறார்: டாவருக்கு அருகில் கணவன் மனைவி ஆகிய நாங்கள் இருவரும் 6-7 ஆண்டுகள் வரை இறைவழியில் அழைக்கவும், திருக்குர்ஆன் வகுப்புகள் நடத்தியும் வந்தோம். எதிர்ப்புகள் எழுந்தன. அப்பணி நின்றுவிட்டது. அது ரப்வாவின் அருகிலுள்ள ஒரு கிராமம் ஆகும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அவருக்கு நல்ல பலனை வழங்கியுள்ளான்.

**மதிப்பிற்குரிய மஸ்வூத் அஹ்மத் பட்டி சாஹிப் ஷஹீத்.** இவர் அஹ்மத்தீன் சாஹிப் பட்டியின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் மூதாதையர் கிரீப்பட் கஸீர் மாவட்டத்தில் வசித்தனர். இவரது தந்தை வழிப்பாட்டனார் ஜமாலுத்தீன் சாஹிப் அவர்கள் ஆவார்கள். 1911 அல்லது 1912 ஆம் வருடதில் பைஅத் செய்தவர். 1975 -ல் இவரது குடும்பம் லாஹூருக்கு குடிபெயர்ந்தது. தமது தந்தையுடன் சேர்ந்து பணியாற்றினார். மெட்ரிக் வரை படித்தவர்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நல்ல தைரியமிக்க உறுப்பினராவார். இவரது சகோதரர் முஹம்மத் அஹ்மத் சாஹிப் லாஹூர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊரின் சதர் ஆக உள்ளார். தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தைப் பெற்றார். இவரது வயது 33. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆவுக்கு முன் சுன்னத் தொழுது கொண்டிருந்த போது துப்பாக்கிச்சூடு ஆரம்பமானது. தொழுகையை முடித்து தனது ஆடையைக் கிழித்து அருகில் ஒரு

பையனது காயத்தைக் கட்டினார். அவனுக்கு ஆறுதல் கூறினார். பெரும் தைரியத்துடன் ஒரு தீவிரவாதியைப் பிடித்து வீழ்த்தி அவனை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதில் வெற்றி பெற்று விட்டார். இன்னொரு தீவிரவாதி அதேவேளையில் இவரை சுட்டு **ஷஹீ**தாக்கினார்.

**மதிப்பிற்குரிய ஹாஜி முஹம்மத் அக்ரம் பேக் சாஹிப் ஷஹீது**. இவர் சவுத்ரி அல்லாஹ்....... சாஹிபின் மகன் ஆவார். இவரது குடும்பம் சேக்பூரா ஊரைச் சேர்ந்தது. இவரது மூதாதையர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் பைஅத் செய்தவர்கள் ஆவர். பிறகு இந்த குடும்பம் அலிப்பூருக்கு குடிபெயர்ந்தது. இங்கு தான் இந்த **ஷஹீ**து மர்ஹூம் பிறந்தார். மெட்ரிக் வரை படித்தவர். ஏறத்தாழ 1950 ஆம் ஆண்டில் இவரது குடும்பம் லாஹூருக்கு குடிபெயர்ந்தது. பணியிலிருந்து 1966 –ல் ஓய்வு பெற்றார். ஸயீம் அன்சாருல்லாஹ்வாக நீண்டகாலம் இருந்தார். இவரது வயது 76. தாருஸ் ஸிக்ரில் இவரது **ஷஹா**தத் நடந்தது. பள்ளியில் 4வத வரிசையில் உட்கார்ந்திருந்தார். தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தியதால் **ஷஹீ**தாகி விட்டார்.

இவரது தந்தை ஒரு வீட்டை ஜமாஅத்திற்கு அன்பளித்தார். அதில் இப்போது முரப்பி – கொள்கைப்பரப்புனர் வீடு உள்ளது. பத்தே என்ற அவ்வூரில் இவரது தந்தை நீண்ட காலம் சதர் ஆக இருந்தார். குடும்பத்தினர் கூறினர்: இவர் முயற்சி செய்பவர் ஆவார். வயதில் பெரியவராக இருந்த நிலையிலும் சிறுவர்களுக்கும் தொண்டு செய்பவராக இருந்தார். மிகவும் தூயவர்.

**மியான் லாயிக் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் மியான் **ஷ**ஃபீக் அஹ்மது சாஹிபின் மகன் இவரது மூதாதையர் அம்பாலா பகுதியைச் சேர்ந்தவர். இவரது கொள்ளுத் தாத்தா பாபு அப்துர் ரஹ்மான் சாஹிப் அம்பாலாவின் அமீராக இருந்தவர். நாடு பிரிவினைக்குப் பிறகு இவரது குடும்பம் லாஹூருக்கு குடிபெயர்ந்தது. **ஷஹீ**து மர்ஹூம் அம்வாலேயில் பிறந்தவர். லாஹூரில் ஆரம்பக் கல்வி கற்றார். **ஷஹா**தத்தின் போது இவரது வயது 66. இஷாஅத் செயலராக ஹல்கா கிளார்பார்க்கில் தொண்டு செய்யும் வாய்ப்பினை பெற்றிருந்தார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்தார். தீவிரவாதிகளின் துப்பாக்கி சூடு நடந்த போது கடுமையாக காயமுற்றார். ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் **ஷஹீ**தானார். கடுமையான இரத்தம் வெளியேறி விட்டது. மூன்று மணி நேரம் அதே நிலையில் இருந்துள்ளார். உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை.

**ஷஹீ**து மர்ஹூம் Electrician ஆக இருந்தார். சாதாரண மனிதர். அமைதியாக இருப்பார். எவரிடமும் எந்த வரம்புமீறலும் செய்ததில்லை. தஹஜ்ஜுத் தொழுபவர். வீட்டில் குழந்தைகளிடமும் நட்புடன் நடந்து கொள்வார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

**மிர்ஸா ஷாவல் முனீர் சாஹிப் ஷஹீது.** இவர் மிர்ஸா முஹம்மத் முனீர் சாஹிபுடைய மகன் ஆவார். **ஷஹீ**து மர்ஹூமின் தந்தை வழி தாத்தா ஹஸ்ரத் அஹ்மத்தீன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். **ஷஹீ**து மர்ஹூமின் தந்தையான முனீர் சாஹிப் Sound System தொழில் செய்பவர். **ஷஹீ**து மர்ஹூம் B.Com. முடித்து B.B.A. படித்துக் கொண்டிருந்தார். **ஷஹா**தத்தின் போது இவரது வயது 19. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தீவிர தொண்டர். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர். தாருஸ் ஸிக்ரில் **ஷஹா**தத்தின் பானத்தை அருந்தினார். **ஷஹீ**து அவர்கள் தனது தம்பியுடன் மெயின் ஹாலில் ஜுமுஆவின் முன் சுன்னத் தொழுது விட்டு அமர்ந்திருக்கும் போது துப்பாக்கி சூடு ஆரம்பமானது. முதல் தாக்குதல் மிஹ்ராபில் ஏற்பட்டது. தாக்குதல் ஆரம்பமானதும் ஹாலிலிருந்து வெளியில் வந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு உள்ளே வந்தார். வாசலில் அமர்ந்து கொண்டார். அடுத்த சகோதரரும் அருகில் வந்தார். வீட்டிலிருந்து வந்த போனில் பேசிக் கொண்டிருந்தார். அதற்குள் மினாருக்கு அருகிலிருந்த வாசலிலிருந்து ஒரு தீவிரவாதி ஹாலுக்கு வந்து துப்பாக்கி சூடு நடத்தினான். அதில் கணிசமான மக்கள் **ஷஹீ**தானார்கள். **ஷஹீ**து மர்ஹூம் குண்டடிபட்டு காயமுற்றிருந்தார். சகோதரர் கூறும் போது, நான் குரலிட்டு அழைத்தேன். ஆனால் அவர் அமைதியாக இருந்தார். காலிலிருந்து கணிசமான இரத்தம் வெளியேறி விட்டது. எனது காலை சரி செய் என்றார். காலில் கட்டுப்போட நினைத்தேன். முடியவில்லை. சதையும் பிய்ந்து இருந்தது. அரை

மணி நேரம் அதே நிலையில் இருந்தார் என்று குறிப்பிட்டார். பிறகு ஷஹாதத்தின் பதவியைப் பெற்றார். அவரது சகோதரர் மேலும் கூறும்போது, மிகவும் தைரியமாக இருந்தது. வாயிலிருந்து எந்தப் புலம்பலும் முறையீடும் இல்லை. கண்களில் மகிழ்ச்சி தெரிந்தது. எனது சகோதரன் தப்பித்தான். முற்றிலும் ஆரோக்கியமாக உள்ளான் என்ற மகிழ்ச்சி காணப்பட்டது என்றார். அவரது ஒரு நண்பர் இது குறித்து எழுதும் போது, குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உணர்வுமிக்க மனிதராக இருந்தார். சில மாதங்களாக மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக பணியாற்றி வந்தார். ஒருமுறை இரவில் 11 மணிக்கு நான் வீட்டிற்கு சென்றேன். ஹகீகத்துல் வஹி என்ற நூலின் தேர்வு எழுத அவரை எழுத வைக்க வேண்டியிருந்தது. கூப்பிட்ட உடனேயே அந்த இரவிலும் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு என்னுடன் புறப்பட்டார். வீடுகளுக்கு சென்றோம். இதுவன்றி ஜமாஅத்தின் பணிகளுக்காக வண்டியைக் கொடுத்து விடவும் செய்தார். மிகவும் எளியவர். எதற்கும் மறுக்க மாட்டார் என்றார்.

இவரது இன்னொரு நண்பர் கூறுகையில், நான் ஒரு கனவில் ஷாவல் முனீரை சந்திக்கிறேன். இது ஷஹாதத்திற்குப் பிறகு நடந்த கனவு ஆகும். அக்கனவில் அவரிடம் நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? என்று அவர் என்னிடம் கேட்க இங்கு இருக்கிறேன் என்று நான் கூறவும், சகோதரரே! நான் இங்கு இருக்கிறேன்; மிக சந்தோஷமாக இருக்கிறேன். நீங்களும் வாருங்கள் என்று கூறுகிறார். அது கேட்டு நான் மகிழ்கிறேன் என்று தனது கனவை குறிப்பிடுகிறார். அல்லாஹ் இந்த இளைஞரின் தகுதியை உயர்த்துவானாக. இந்த இளைஞர் தான் பின்னால் விட்டுச் சென்றுள்ள இளைஞர்களை அவர்தம் ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு நினைவூட்டுகிறார். அல்லாஹ்வின் வழியில் நாங்கள் எம்மை அர்ப்பணித்து விட்டோம். எனவே நீங்களும் உங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் பின்வாங்கி விடாதீர்கள் என்று கூறுகிறார்.

**மதிப்பிற்குரிய மலக் மக்ஸூத் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் மதிப்பிற்குரிய அஸ்லே மஹ்மூத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனார். பட்டாலாவைச் சேர்ந்தவர். இவரது தாய்வழிப்பாட்டனார் அலிபக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாக இருந்தார். போபாலைச் சார்ந்தவர். ஷஹீது மர்ஹூமின் தாயாரின் தலையில் சிறு வயதாக இருந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பரிவுடன் கைகள் வைத்துள்ளார்கள். இவரது தந்தை வழிப்பாட்டனாரும், தாய்வழிப் பாட்டனாரும், தாயாரும் சஹாபிகளாக இருந்தனர்.

ஷஹீது மர்ஹூம் போபாலில் பிறந்தார். தாய்வழிப்பாட்டி முக்தார் பேகம் சாஹிபாவினால் காதியானில் வளர்க்கப்பட்டார். தஃலிமுல் இஸ்லாம் கல்லூரியில் F.A. படித்தார். படித்து விட்டு திரும்பவும் போபால் சென்றார். பிறகு லாஹூர் வந்து குடும்பத்துடன் தங்கி விட்டார். ஷஹாதத்தின் போது இவரது வயது 80. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தஃலிமுல் குர்ஆன் செயலராகவும், அமீன் மற்றும் ஆடிட்டராகவும் இன்னும் பல தொண்டுகளை செய்தவர். ஷஹீது மர்ஹூம் தாருஸ் ஸிக்ரில் ஷஹீதானார். ஷஹீது மர்ஹூமின் மகள்வழிப் பேரன் கூறும்போது, ஷஹீது மர்ஹூம் மஸ்ஜிதின் மெயின் ஹாலில் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தார். துப்பாக்கி சூட்டின்போது முரப்பி சாஹிபின் வழிகாட்டலின்படி அமல் செய்தவாறு வளாகத்திற்கு வெளியில் வந்து பார்க்கும் போது ஷஹீது மர்ஹூம் காதில் விரலை வைத்தவாறு படுத்திருந்தார். ஆனால் அவரிடம் அப்போது அசைவே இல்லை. ஒருவேளை அப்போதே ஷஹீதாகி இருப்பார்கள் போலும். ஏனெனில் கணிசமான குண்டுகள் உடலில் பாய்ந்திருந்தன. ஷஹீது மர்ஹூமின் வீட்டினர் கூறுகிறார்கள்: ஐவேளை தொழுகை, தஹஜ்ஜுத் தொழுகைகளில் பேணுதல் உள்ளவர். முறைப்படி சந்தா கொடுப்பார். தப்லீக் ஆர்வம் உள்ளவர். ஜமாஅத் புத்தகங்களைப் படிப்பது, குத்பாக்களை கேட்பதில் ஆர்வம் உள்ளவர். காலத்தின் கலீஃபாவின் குத்பாவை முறைப்படி தொடர்ந்து கேட்பவர். M.T.A.-வின் மற்ற நிகழ்ச்சிகளையும் ஆர்வமாக பார்ப்பார்; கேட்பார். அக்கவுண்ட்ஸில் நிபுணராக இருந்தார். ஒருமுறை காதியானில் எவர் முதலில் மஸ்ஜித் வருவார் என்று பார்ப்போம் என்ற போட்டி சிறுவர்களுக்குள் ஏற்பட்டது. இவர் அதிகாலை 2.30 மணிக்கு பள்ளிக்கு வந்து விட்டதாக தமது சிறு வயது சம்பவத்தை குறிப்பிட்டார். இவரது மகன் தபஸ்ஸும் மக்ஸத் சாஹிப் வகீல் ஆவார். தமது வாழ்வை ஜமாஅத்திற்கு வக்ஃப் செய்தவர். ரப்வாவில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

**மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மத் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் டாக்டர் நூர் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தையார் மற்றும் தந்தைவழிப்பாட்டனார் சவுத்ரி ஃபஸல் தாஸ் சாஹிப் 1921 -1922 ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் சேர்ந்தனர். ஷஹீது மர்ஹூமின் தந்தையார் அவர்கள் முஹம்மத் இஸ்மாயில் சாஹிபுடன் ஜூனியர் டாக்டராக பணியாற்றினார். இவரது தந்தையார் ஒரு சமயத்தில் ஒரு வருடத்திற்கு மேல் ஜமாஅத்திற்கு வக்ஃப் செய்தார். 1928ல் கீவா என்ற பகுதியில் ஷஹீது மர்ஹூம் பிறந்தார். பைஸலாபாத்தில் மெட்ரிக் படித்தார். பிறகு Air Force -ல் சேர்ந்தார். இரு வருட பயிற்சிக்கு பிறகு வாரன்ட் அதிகாரியாக பணியாற்றினார். இவரது பணிக்காலத்தில் 1965 -ம் வருட யுத்தம் மற்றும் 1971 -ன் நடந்த யுத்தத்தில் பங்கு கொண்டார். 1965 -ன் யுத்தத்தில் ஒருமுறை ஆயத்தம் நடக்கும் போது வெடிகுண்டு நிரப்பும் ஆயுதம் பழுதானது. அப்போது மிகவும் தைரியமாக குண்டுகளை தோளில் எடுத்து வந்து நிரப்பினார். இன்று இந்த பெயர் தாங்கி தேசஅபிமானிகள் அஹ்மதிகள் மீது, இவர்களுக்கு தேசப்பற்று இல்லை என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் நமது இந்த மக்கள்தான் நாட்டுக்காக தியாகம் செய்தவர்கள்; தியாகம் செய்யத் தயாராக இருந்தவர்கள் ஆவர். அரசு சார்பாக பிற நாடுகளுக்கு பயிற்சி பெறுவதற்காக சென்று வந்தார். 1971-ல் ஓய்வு பெற்றார். பிறகு civil defenceல் வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் நிபுணர்களின் குழுவின் தலைவராக 1988 வரை பணியாற்றினார். ஷஹாதத்தின்போது 85 வயது. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். மார்டன் டவுண் மஸ்ஜிதில் இவரது ஷஹாதத் நடந்தது. அங்கேயே எப்போதும் பெரும்பாலும் ஜுமுஆ தொழுவார். ஜுமுஆவை மிகவும் கவனமாக நிறைவேற்றினார். வியாழக்கிழமையே ஜுமுஆவுக்கென்று அணிவதற்காக துணிகளை இஸ்திரி செய்து தொங்க விட்டு விடுவார். 12 மணிக்கெல்லாம் பள்ளிக்குப் போய் விடுவார். ஹாலினுள் இடது புறம் நாற்காலில் அமர்ந்திருப்பார். சம்பவத்தன்று ஒரு இளைஞன் இரண்டாவது மூன்றாவது வரிசைக்கு நடுவில் ஓர் இளைஞர் இரத்தத்தில் கிடப்பதைக் கண்டார். இவர் அந்த இளைஞனை அழைத்து எனக்கு எனது வயிற்றில் குண்டடிப்பட்டுள்ளது. துணியை வைத்து கட்டுங்கள் என்று கூறினார். பிறகு காயமுற்றவர்களுக்கு தண்ணீர் கொடுக்குமாறு கூறினார். இவரது உள்ளங்கையிலும் ஒரு குண்டு பட்டிருந்தது. இவரை காயமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். இரவு 8 மணிக்கு மருத்துவமனையில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது.

ஷஹீதின் குடும்பத்து பெண் ஒருவர் ஒரு கனவில், லாஹூரில் துப்பாக்கி சூடு நடப்பதாக கனவில் கண்டார். இந்தக் கனவு நிறைய பேருக்கு கண்டுள்ளது. இது நடக்கவிருந்த சம்பவத்தை அடையாளம் காட்டியது. யாரிடமும் காழ்ப்புணர்ச்சி கொள்ளமாட்டார். நல்ல ஆரோக்கியம் உள்ளவர். குழந்தைகளிடம் அன்பு காட்டுபவர். திருக்குர்ஆன் ஓதுவதில் ஆர்வம் கொண்டவர். கிலாஃபத்துடன் அன்பு உள்ளவர்.கபடி மற்றும் கால்பந்து விளையாடுவதில் வீரர் ஆவார்.

இவரது மகள் இவரைப் பற்றி எழுதுகிறார்: அநேகமாக எவரும் கூறியதை வைத்து இதனை எழுதியிருப்பார் போலும். அதில் கூறப்பட்டிருப்பதாவது, குத்பா நடந்து கொணடிருந்தது. குண்டுகளின் வெடிச்சத்தம் தூரத்திலிருந்து சிறிது சிறிதாக அருகில் கேட்டுக் கொணடே வந்தது. முரப்பி சாஹிப எல்லாரையும் தரூது ஓதுமாறு கூறினார். குத்பா தொடரும் என்று கூறினார்.

எனது அப்பாவின் பக்கத்தில் சவுத்ரி வஸீம் அஹ்மது சாஹிபின் தந்தை அமர்நதிருந்தார். அவரை வசீம் சாஹிப் கீழ்த்தளத்திற்கு அழைத்துச் சென்றார். எனது தந்தையாரை பெரியவரே எழுங்கள் என்று ஒருவர் கூறியதும் எனது தகப்பனார் எழவில்லை. நிலைமையைக் கூர்ந்து கவனித்து வந்தார். இன்னொரு முறையும் எழுந்து கீழ்த்தளத்திற்கு செல்லுமாறு கூறியும் செல்ல வில்லை. பிறகு தீவிரவாதிகளின் துப்பாக்கி நாற்காலிகளின் பக்கம் திரும்பியது. குண்டுகள் அப்பாவை கடந்து சென்றன. ஆனால் அவர் எழவில்லை. கர்னல் பஷீர் அஹ்மத் பாஜிபா சாஹிப் நாற்காலிகளின் பின்னால் இருந்தார். அவரின் மீதும் துப்பாக்கி சூடு நடந்தது. ஆனால் தப்பித்து விட்டார். அவரது கூற்றின்படி அவருக்கு சிறிது காயம் ஏற்பட்டது. தீவிரவாதி இவரை கொன்று விட்டதாக நினைத்து துப்பாக்கியை வேறு பக்கம் திருப்பினான். அல்லது தனது துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பினான். அவ்வேளையை எனது தந்தையார் பெரும் நிஃமத் ஆகக் கருதினார். அவனை பின்புறமாக கழுத்தைப் பிடித்தார். நிச்சயமாக ஒரு மறைவான ஆற்றல் உதவி செய்தது. கர்னல் பஷீர் சாஹிப்

உடனேயே பின்னாலிருந்து வந்து தீவிரவாதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். பஷீர் சாஹிப் கூறுகிறார்: நாங்கள் படிக்கட்டில் சில step பின்னாலிருந்து பார்த்தோம். தீவிரவாதி சற்று கட்டுப்பாட்டிற்கு வந்து விட்டான். அவ்வேளையில் நமது குத்தாம்களும் உதவிக்கு வந்து விட்டனர். இந்த நிலையில் நமது ஷஹீது சாஹிபிற்கு ஒரு குண்டு பட்டது. இதற்கு முன்பும் ஒரு குண்டு பாய்ந்திருந்தது. மொத்தம் மூன்று குண்டுகள் அவர் மீது பட்டிருந்தன. முதலில் சிறு காயம் தான். இந்த நெருக்கடியில் இன்னும் சில குண்டுகள் பட்டுவிட்டன.

எவ்வாறிருப்பினும் இவரது இந்த எதிர்நடவடிக்கைக்குப் பிறகு ஜெர்னல் பஷீர் சாஹிப் மற்றும் சிலர் தீவிரவாதியின் ஜாக்கெட்டை செயலிழக்கச் செய்தனர். அவனது கை கால்களைக் கட்டினர். பார்த்தவர்கள் கூறுகின்றனர்: ஷஹீது சாஹிபிற்கு குண்டடி பட்ட நிலையிலும் மூளை நன்றாக வேலை செய்தது. குண்டை செயலிழக்கச் செய்வதற்கான முறையை அவர் கூறிக் கொண்டிருந்தார். ஏனெனில் முதலில் அவ்வேலையை அவர் செய்து வந்திருந்தார். மேலும் பார்த்தவர்கள் கூறுகின்றனர். இவ்வளவு நிலையிலும் ஒருமுறை கூட அய்யோ, அந்தோ என்று கூறவில்லை. மிகவும் நிதானமாக உயிரை இறைவனிடம் ஒப்படைத்து, ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

**இல்யாஹ் அஸ்லம் குறைஷி சாஹிப் ஷஹீது.** இவர் மாஸ்டர் முஹம்மது ஷஃபி அஸ்லம் சாஹிபின் மகன் ஆவார். இவரது குடும்பம் காதியானில் இருந்தது. பிறகு குஜ்ரான்வாலாவுக்கு மாறியது. இவரது தந்தை முபல்லிக் ஆக இருந்தார். தஹ்ரீகே ஜதீதில் தொண்டு செய்தார். இவரது சகோதரர் அஹ்மத் அஸ்லம் சாஹிப் காதியான் 313 தர்வேஷ்களில் ஒருவராக இருந்தார். படிப்பிற்குப் பிறகு இவர் National Bank -ல் சேர்ந்தார். AVB -ன் Assistant Vice President ஆக இருந்து பணி ஓய்வு பெற்றார். ஷஹாதத்தின் இவரது வயது 76. வஸிய்யத்தில் இணைந்தவர். ஜிஹ்ரடவுண் பகுதியின் சதர் ஆகவும் இருந்தார். பைத்துந் நூரில் இவரது ஷஹாதத் நடந்தது. பின்னாலுள்ள ஹாலில் முதல் வரிசையில் இருந்தார். இரு நண்பர்களுடன் சேர்ந்து ஹாலின் கதவுகளை மூடுவதற்கு முயன்ற போது துப்பாக்கி சூட்டினால் கடும் காயமுற்றார். காயமுற்ற நிலையில் பல மணிநேரங்கள் கிடக்க வேண்டியதாயிற்று. மாலை 4 மணி அளவில் ஷஹீதாகி விட்டார். இவரது மனைவி கூறுகிறார். உள்ளத்தால் எளியவர். எல்லா நிலையிலும் பொறுமையும் நன்றியுணர்வும் உள்ளவர். தவக்குல் உள்ளவர். துஆவின் மீது குறிப்பான கவனம் உள்ளவர். ஜமாஅத் பணிகளை மகிழ்ச்சியுடன் செய்து வந்தார்.

இவரது பிள்ளைகள் கூறுகின்றனர். ரொம்பவும் பிரியமானவர். தஹஜ்ஜுத் தொழுகையில் பேணுதல் உள்ளவர். தொழுகையில் களா ஆக்கியதை ஒருபோதும் பார்க்கவில்லை. சந்ததிகளையும் தொழுகையில் கவனமூட்டுவார். நல்ல சிரித்த முகம் உடையவரும், பழகுவதற்கு எளியவரும் ஆக இருந்தார். ஜொஹ்ர டவுண் ஹல்காவின் தலைவராக ஐந்து ஆண்டுகளாக இருந்தார். ஜமாஅத்தின் எந்தவொரு சேவகரும் பொறுப்பாளரும் பணி நிமித்தம் வந்தால், பகலாயினும் இரவாயினும் கஷ்டமாக கருதமாட்டார். குழந்தைகளிடம் ஜமாஅத் வேலை வந்தால் நான் தூங்கினாலும் எழுப்பிவிட வேண்டும் என்று கூறுவார். எப்போதும் அதனை நடைமுறைப்படுத்தியும் வந்தார். எப்போதும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் விசுவாசத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுரை செய்து வருவார்.

**மதிப்பிற்குரிய தாஹிர் மஹ்முத் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் ஸபர்காட் மாவட்டத்தைச் சேர்ந்த ஷயீது அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். இவரது தந்தையார் 1953-ல் அவரது குடும்பத்தில் முதல் அஹ்மதியானார். 1993-ல் லாஹூருக்கு குடிபெயர்ந்தார். ஷஹீது மர்ஹூம் மெட்ரிக் படித்தார். தனியார் வேலையாக மலேசியா போய்விட்டார். ஷஹாதத்தின் போது இவரது வயது 53. மார்டன் டவுண் பகுதியின் மஸ்ஜித் நூரில் இவரது ஷஹாதத் நடந்தது.

ஜுமுஆவுக்கு வருவதற்கு முன் ஹல்காவின் சதர் சாஹிபின் வீட்டுக்குச் சென்றார். சதர் சாஹிப் இவரிடம் நகைச்சுவையாக, சரி உங்களை நான் ஜுமுஆ தொழுவதற்காக கூட்டிப் போகிறேன்; வாருங்கள்! என்று கூறினார். இவ்வாறு முதல் முறையாக அன்றுதான் சதர் சாஹிபுடன் மஸ்ஜித் நூர் பள்ளிக்குச் சென்றார். மற்ற நேரங்களில் சென்டர்கள் அல்லது பைத்துஸ் ஸிக்ரில் தான் இவர் ஜுமுஆ தொழுபவராக இருந்தார். இப்போது மர்டன் டவுண் பள்ளியில் ஷஹாதத் நடந்தது. இரவில் 7 மணி அளவில் தான் இவர் ஷஹீதானது தெரிய வந்தது.நெஞ்சில் இரண்டு குண்டுகளும் நெற்றியில் ஒரு குண்டும் பட்டிருந்தது. நான் குண்டுகளுக்கு

பயப்படமாட்டேன்; நான் **ஷஹீது** ஆகத் தான் போகிறேன் என்று கூறி வந்தார். எல்லா இடங்களிலும் இவரைத் தெரிந்தவர்கள் உண்டு. தூய அஹ்மதி வழியில் செல்கிற ஒவ்வொருவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் கூறுவார்.

**ஸய்யத் இர்-ாத் அலி சாஹிப் -ஹீது.** இவர் ஸய்யது சமீயுல்லாஹ் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீது** மர்ஹூம் ஸியால்கோட்டில் வாழ்ந்தவர். இவரது தாதா ஹஸ்ரத் கஸ்லத் அலி **ஷா** சாஹிப் (ரலி) இவரது நானா சையத் மீர்ஹாமித் –ா( ரலி) இருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சாஹாபிகள் ஆவர். சியால்கோட்டைச் சேர்ந்த இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய நெருங்கிய நண்பர்களாக இருந்தனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சியால் கோட்சென்றபோது இவரது வீட்டில்தான் தங்குவார்கள். இவரது தந்தையார் ஜாமியா அஹ்மதிய்யா ரப்வாவின் Principal ஆக இருந்தார். இவர் தனது வீட்டை ஜமாத்துக்கு வக்ஃப் செய்திருந்தார். **ஷஹீது** மர்ஹூம் B.A –வுக்கு பிறகு போட்டித் தேர்வுகளுள் பங்குபெற்று Assistant Director ஆக உயர்ந்தார். பிறகு deputy director labour department என்ற நிலையில் ஓய்வு பெற்றார். காரடன் டவுனின் பொருளாளராக இருந்தார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 80. மஸ்ஜித் பைத்துந்நூரில் **ஷஹீதா**னர்.

இவரது வீட்டில் உள்ளவர்கள் கூறினார்கள் : ஜுமுஆ தொழுகைக்காக செல்லும் முன் நெஞ்சில் கையைக் கட்டியவாறு படுத்துக் கொண்டு இன்று அமைதி பெற உள்ளம் நாடுகிறது என்றார். செல்வதற்கு விருப்பம் இல்லை என்று கூறினார். பிறகு எழுந்து ஜுமுஆ தொழச் சென்றார். செல்லும் போது நான் போகிறேன் என்றார். பிறகு மீண்டும் ஒருமுறை நான் போய்கொண்டே இருக்கிறேன் என்றார். மஸ்ஜித் நூர் பள்ளியின் வெளி வளாகத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். ஆரம்பத்தில் நாற்காலியில் இருப்பவர்கள் தான் உடனடியாக ஹாலுக்குள் அனுப்பப்பட்டனர். அங்கு இவருக்கு **ஷஹாதத்** ஏற்பட்டது. உடலில் 3 குண்டுகள் பாய்ந்திருந்தன.

இவரது வீட்டினர் கூறுகின்றனர் : சில வருடங்களுக்கு முன்னர் **ஷஹீத்** மர்ஹூம் **இன்னீ ராஃபிவுக்க வ முதவஃபீக்க** – நான் உன்னை உயர்த்துவேன்; மரணிக்கச் செய்வேன் என்று சப்தம் வந்ததாக கூறினார்.

ஒருமுறை கேட்டவர் வரிசையை ஒருவேளை தவறுதலாக மாற்றி எழுதியிருக்கலாம். சரியான முறையில் **இன்னீ முதவஃப்பீக வ ராஃபிவுக்க** – நான் உன்னை மரணிக்கச் செய்வேன்; உன்னை உயர்த்துவேன் என்று வந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் எனக்கு இந்த சப்தம் கேட்டதும் இதற்கு என்ன பொருள் என்று தெரியவில்லை என்று கூறியுள்ளார்.

**ஷஹாதத்திற்கு** 20 நாள்களுக்கு முன்பு எனக்கு சப்தம் வந்தது. we receive you with open arms with red carpet என்று கூறியுள்ளார்.

மேலும் **ஷஹீத்** மர்ஹூமின் கனவில் ஒரு வீட்டைப் பார்த்தார். அதில் இருந்து மிர்ஸா **பஷீ**ருத்தீன் மஹ்முத் (ரலி) அவர்கள் வருகிறார்கள் என்று சப்தம் வந்தது. ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதம் முன்பு நான் எனது மூதாதையர்களைப் போன்று மார்க்க சேவை செய்ய முடியவில்லையே என்று வருத்தத்துடன் கூறினார். அடியார்களுக்குள்ள உரிமையை நிறைவேற்றினார். உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வார்.

**மதிப்பிற்குரிய நூருல் அமீன் சாஹிப் -ஹீத்.** இவர் நஸீர் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீது** மர்ஹூம் ராவல்பிண்டியில் பிறந்தவர். அங்கேயே மெட்ரிக் முடித்தார். பிறகு Navy -யில் Photographer ஆக உயர்ந்தார். இவரது தந்தைவழிப் பாட்டனார் பிர்பைஸ் ஸாஹிப் ( ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். இவரது தாய்வழி கொள்ளுப்பாட்டனார் பாபு அப்துல் கஃப்பார் சாஹிப் ஹைதராபாத் மாவட்டத்தின் அமீர் ஆக இருந்தார். அவரும் இறை வழியில் **ஷஹீதா**னவர். நூருல் அமீன்

சாஹிப் ஷஹீது அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நல்ல உழைக்கும் பண்பு கொண்ட உறுப்பினர். உமுமி செயலராக மார்டன் டவுண் ஹல்காவில் சேவை செய்து வந்தார்.

சில காலம் முன்பு கராச்சி சென்றார். ஷஹாதத்தின் போது வயது 39. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. சம்பவத்தின்போது நண்பர்களுக்கும், வீட்டினருக்கும் போன் வந்தது. நான் நினைத்தால் இந்த இடத்தில் இருந்து வெளியேற முடியும். ஆனால் எனக்கு ட்யூட்டி போடப்பட்டுள்ளது என்றார். உட்கார்ந்த இடத்திலேயே கிரானைட் வீசப்பட்டு அங்கேயே ஷஹீதானார்.

ஷஹீத் மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: நல்ல இயல்புள்ளவர். ஜுமுஆ வேளையில் 2மணிக்கு போன் செய்து நான் நலமாக இருக்கிறேன் என்றார். அங்கிருந்து வெளியில் வந்து விடுங்கள் என்று நான் கூறினேன். அதற்கு அவர், இங்கு நிறைய மக்கள் உள்ளனர். அவர்களை விட்டு விட்டு வர இயலாது என்றார். குழந்தைகளின் தர்பிய்யத்தில் கவனம் செலுத்துபவர். குறிப்பாக வக்ஃபே நவ் குழந்தைகளின் தர்பிய்யத்தில் கவனம் செலுத்துவார். ஜமாத் Duty-யில் எப்போதும் முன்னால் நிற்பார்.

**சவுத்ரி முஹம்மத் மாலிக் சாஹிப் ஷஹீது.** இவர் ஃபதஹ் முஹம்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீத் மர்ஹூமின் மூதாதையார் பக்கர்மண்டில் இருந்தனர். அங்கிருந்து குஜ்ரான்வாலா - லாஹூருக்கு குடிபெயர்ந்தனர். இவர் பிறக்கும் முன்பே தந்தையார் மரணித்துவிட்டார். மெட்ரிக் படிக்கும் போது, இவருடைய தாயார் தமது நகையை கழற்றித் தந்து இவரை மேற்கொண்டு படிக்குமாறு கூறினார். ஸியால்கோட்டின் காலேஜில் B.A. முடித்தார். பிறகு ஜெயிலில் வேலை கிடைத்தது, அதற்கு அவர் செல்லவில்லை. ஆனால் குடும்பத்தை கவனித்துக் கொண்டார். பிள்ளைகளையும் படிக்க வைத்தார். இவருக்கு 93 வயது. இவர் வஸிய்யத் செய்தவர். எவ்வாறிருப்பினும் செல்லக்கூடியவர்தான். ஆனால் அல்லாஹ் ஷஹாதத்தின் பதவியைக் கொடுத்து விட்டான். மஸ்ஜித் பைத்துந்நூரில் இவரது ஷஹாதத் நடந்தது.

குடும்பத்தினர் கூறுகின்றனர் : வயது அதிகமானதால் மறதி இருந்தது. 7-8 ஜுமுஆக்களை அதனால் விட்டு விட்டார்.

28 தேதி - மே மாதம் அன்று ஜுமுஆவுக்குச் செல்வதற்கு மிகவும் பிடிவாதம் பிடித்தார். மருமகள் கூறுகிறார் : வெளியில் தட்பவெப்ப நிலை சரியில்லை. பலத்த காற்று வீசுகிறது. ஜுமுஆவுக்குப் போக வேண்டாம் என்று தான் பையன்களும் விரும்பினர். ஆனால், ஜுமுஆ தொழுகைக்குத் தயாராகியவாறு வீட்டை விட்டு வெளியில் வந்தார். பொதுவாக பள்ளிக்கு வெளியில் நாற்காலியில் அமர்ந்து தொழுவார். எப்போதும் போல் சம்பவநாளன்றும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். தாக்குதல் தொடங்கிய போதே குண்டடிபட்டு ஷஹீதாகிவிட்டார். மிகவும் அமைதியை விரும்புபவர். எப்போதும் வரம்பு மீறியதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களை மிகவும் ஆர்வத்துடன் படிப்பார். வீட்டினருக்கும் படிக்குமாறு கூறி வந்தார்.

இவரது மகன் தாவூத் அஹ்மது சாஹிப் கூறுகிறார்: நான்M.A. Economics. படித்துவிட்டு தந்தையாரிடம் வேலைக்குச் செல்வதற்காக அனுமதி கேட்டபோது என்னிடம் நான் செய்த வேலைலை நீயும் செய் என்றார். உங்களிடம் என்ன வேலை உள்ளது என்று நான்கேட்க,தந்தையார் கூறினார் . நீ அலுவலகத்துக்கு போவதுபோன்று ஆயத்தம் செய்துகொண்டு காலை 9 மணிக்கு என்னிடம் வா. மதிய இடைவெளியும் உண்டு. மாலை 5 மணிக்கு வேலை முடிந்துவிடும். இங்கு மேஜைக்கு முன் அமர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை படித்துக் காட்டு. நீ வேவைக்கு சென்றால் எவ்வளவு சம்பளம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறாயோ அதனை நான் உனக்கு தருகிறேன் என்றார். நூல்கள் அனைத்தையும் ஷஹீதுக்கு படித்துக் காட்டிய பிறகுதான் வேலைக்குச் சென்றேன். சிறுவயதிலிருந்து பிள்ளைகளுக்கு திருமணம் ஆகும் வரை தொழுகை வேளையில் அறைவாசல் தட்டிக்கொண்டே இருப்பார். பிறகு அவர் எழுந்தவுடன் உளூ செய்ய வைத்து ஜமாத்துடன் வீட்டில் தொழுகை நடைபெற்று வந்தது. தர்பிய்யத் கொடுக்கும் நோக்கத்தில் பிள்ளைகளை ஒருபோதும் அடித்ததில்லை. மகன் கூறுகிறார்: பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக துஆ செய்ய வேண்டுமே தவிர அடிக்கக் கூடாது என்ற தத்துவத்தை எமக்கு உணர்த்தினார்.

இதுவே சரியாகும். அடியால் தர்பிய்யத் ஏற்படாது.

இரவில் கண்விழிக்கும் போதெல்லாம் பிள்ளைகளுக்காக அழுதழுது துஆ செய்யக் கண்டுள்ளேன் என்றும் மகன் கூறியுள்ளார்.

1974 - ல் நாங்கள் சேட்டிலைட் டவுன் குஜரான்வாலாவில் இருந்தோம். நிலைமை மோசமானபோது கணிசமான அஹ்மதிகள் எங்கள் வீட்டில் தஞ்சம் புகுந்தனர். ஒன்றரை முதல் இரண்டு மாதமாக எமது வீடு அருகில் ஜமாத் கேம்ப் இருந்தது. எல்லாருக்கும் நல்ல தொண்டு செய்தார். மிகவும் நேர்மையானவர். வாயிலிருந்து பொய் வரவே வராது. எப்போதும் உண்மை பேசுவார். உண்மைக்கே ஆதரவளிப்பார். முழு குடும்பத்தையும் வஸிய்யத் செய்ய வைத்துள்ளார்.

**சேக் சாஜித் நஸிம் சாஹிப் ஷஹீது.** இவர் ஷேக் அமீர் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். இவரது மூதாதையர் பேரா பகுதியை சார்ந்தவர்கள். இவர் லாஹூரில் B.A. முடித்தார். ராவல்பிண்டியில் Third Grade Officer ஆக உயர்ந்தார். 2003 -ல் மேனேஜராகி பணி ஓய்வு பெற்றார். பிள்ளைகள் லாஹூரில் இருந்ததால் லாஹூர் வந்தார். ஷஹீது மர்ஹூம் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் பொறுப்புமிக்க உறுப்பினராக இருந்தார். தஃலீமுல் குர்ஆனின் நாயிப் முன்தஸிமாக இருந்தார். இவரது வயது 59. வஸிய்யத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்து மிஸ்ல் நம்பர் கிடைத்திருந்தது. மஸ்ஜித் பைத்துந்நூரில் இவரது ஷஹாதத் நடந்தது. ஜுமுஆ தொழுகைக்காக குறித்த நேரத்திற்கு முன்பே வீட்டிலிருந்து வெளியேறுவார். தொழுகையில் கவனம் உள்ளவர். இவர் மஸ்ஜித் நூரில் இரண்டாவது ஹாலில் அந்நாளில் உட்கார்ந்திருந்தார். துப்பாக்கி சூடு ஆரம்பித்த 15-20 நிமிடத்துக்குப் பிறகு தனது மகனுக்கு போன் செய்தார். நான் நலமாக இருக்கிறேன் என்றார். அப்போது எதுவும் ஆகவில்லை. மற்றவர்களுடன் சேர்ந்து வாசல் கதவை மூடிக் கொண்டிருந்தார். கதவில் கொண்டி சரியாக மாட்டவில்லை. இந்நேரத்தில் ஹாலில் இருந்த பலர் கீழ்த்தளத்திற்குச் செல்வதில் வெற்றி பெற்ற தீவிரவாதிகளின் துப்பாக்கி சூடு மற்றும் கிரானைட் வெடிப்பு போன்றவற்றால் மரணித்து விட்டார். ஒரு மகனது திருமணம் மற்றும் வேலை குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஷஹாதத் அன்று மகனை interview -க்கு அனுப்பி இருந்தார். என்ன ஆயிற்று என்று கேட்டார் ? வேலை கிடைத்துவிடும் என்று மகன் கூறினார். அல்லாஹ்வின் அருளால் ஜுன் மாதத்தில் வேலையும் கிடைத்து விட்டது. மனைவி மக்களின் உரிமைகளை நல்ல முறையில் கவனிப்பவர். உறவினர்களை மிகவும் கவனிப்பவர். மென்மையானவர். கட்டுப்படுதல்மிக்கவர். கிலாஃபத்துடன் பேரன்பு கொண்டவர். தேவையுள்ளவர்களை கவனிக்கக் கூடியவர். இவரது மகன் கூறுகிறார் : முஹல்லாவில் உள்ள அஹ்மதியல்லாத ஒரு கடைக்காரர் ஒருவர் கனவில், ஷஹீது சாஹிப் நான் இங்கே எப்படி வந்து சேர்ந்துள்ளேன் என்று தெரியவில்லை. ஆனால் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன் என்று கூறுவதாக கண்டார்.

**முகர்ரம் ஸையத் லயிகீ அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் சையத் முஹ்யுத்தீன் அஹ்மத் சாஹிபின் மகன். ஷஹீதுடைய தந்தையார் ராஞ்சி இந்தியாவில் பீஹார் பகுதியை சார்ந்தவர். அலிகட் யுனிவர்சிட்டியில் படித்தவர். யுனிவர்சிட்டியில் ஓர் அஹ்மதி மாணவரை சந்திந்த போது அவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார். மேலும் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வந்து விட்டார்கள் என்று கூற ஷஹீது சாஹிபின் தந்தை கோபத்தில் அவரை அடித்து அவர மண்டையை உடைத்து விட்டார். பிறகு வெட்கம் ஏற்பட்டது. நூல்களைப் படித்தார்.அமர்தசரஸின் மவ்லவி ஸனாவுல்லாஹ் அம்ரித்சரி அவர்களை சந்தித்து பேசினார். மவ்லவியோ வசைமொழிகளால் நிறைந்த ஒரு புத்தகத்தை இவருக்கு அனுப்பினார். இதனைப் பார்த்த ஷஹீதுகளின் தந்தைக்கு கோபம் ஏற்பட்டது. நான் உங்களிடம் விளக்கம் கேட்டால், நீங்கள் ஏசுவதற்கு கற்றுத் தருகிறீர்களா? என்று கேட்டார். பிறகு அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டது. பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார். முல்லாக்களின் வழக்கம் எப்போதும் இப்படித்தான் இருந்து வந்துள்ளது. இப்போதும் அதைத்தான் செய்கிறார்கள். இப்போது வசைமொழிகளால் நிறைந்த நூல்களை அனுப்புவதில்லை. மாறாக தொலைக்காட்சி முன் அமர்ந்து வாயிற்கு வந்ததையெல்லாம் பேசுகின்றனர். எவ்வாறிருப்பினும் இவர்களின் இச்செயலால் மக்களுக்கு நன்மையின் பக்கம் கவனம் திரும்புவது போன்றுதான் இவருக்கு கவனம் திரும்பியது. ஷஹீது மர்ஹூம் அவர்கள் பிறப்பு அஹ்மதியாக இருந்தார்.

இவரது தந்தை வகீல் ஆக இருந்தார். அஞ்சுமன் மெம்பர் ஆகவும் இருந்தார். ராஞ்சியில் இவர் மெட்ரிக் முடித்தார். **ஷஹீத்** மர்ஹூம் மெட்ரிக்கில் முதல் வகுப்பில் தேறியதுமே தந்தையாருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. பாட்னா யுனிவர்சிட்டியில் M.A. English படித்தார். லாஹூர் வந்தார். 1969 -ல் MCB இல் சேர்ந்தார். 1997 -ல் பேங்க் மேனேஜராக ஓய்வு பெற்றார். ஆனால் ஓய்வு பெற்ற பிறகும் MCB -ல் பணி செய்தார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 72. வஸிய்யத் செய்துள்ளார். மஸ்ஜிதுக்குள் வந்ததும் சுன்னத் தொழுதார். முரப்பி சாஹிபிற்கு பின்னால் வரிசையில் அமர்ந்திருந்தார். அருகில் இருந்த முபாரக் சாஹிபின் நெற்றியில் குண்டு பட்டது. அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது தீவிரவாதி இவரை குண்டுகளுக்கு இலக்காக்கினான். காயமுற்ற நிலையில் எழ முயன்றும் முடியவில்லை.முதுகு எலும்பில் குண்டு பட்டிருந்தது. அங்கேயே **ஷஹீதா**னார். நல்லியல்பு கொண்டவர். ஆனால் எவராவது ஜமாஅத்தின் பெரியவர்களைக் குறித்து தவறாக பேசினால் இவரால் சகித்துக் கொள்ள முடியாது. குறைவாகப் பேசுபவர். ஆனால் ஜமாஅத் மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய பேச்சு வந்தால் மணிக்கணக்கில் பேசிக் கொண்டே இருப்பார். ஜமாஅத்துடன் மவுனமாகவும், ஆழமாகவும் தொடர்பு கொண்டவர். ஜமாஅத்தின் நல்ல அன்பு வைத்திருந்தார். ஒரு பையன் டாக்டர் ஆனார்.இன்னொருவரை I.T. படிக்க வைத்தார். ஒரு மகளை France ல் படிக்க வைத்தார். எல்லா பிள்ளைகளும் நல்ல பணியில் இருக்கிறார்கள்.

இவரது வீட்டினர் இவரைப் பற்றி எழுதுகின்றனர்: ஜுமுஆ தொழுகையின் போது சிறப்பான கவனம் வைத்திருப்பார். ஒருமுறை இவரது மனைவிக்கு நோயுற்று மருத்துவமனையில் சேர்க்க வேண்டியது வந்தது. ஜுமுஆ நேரமாகி விட்டது. அங்கிருந்து நேராக பள்ளிக்கு போய் விட்டார். திரும்பி வரும் போது மனைவி உயிருடன் இருப்பாரா? இருக்கமாட்டாரா? என்பதைப் பற்றி கவலைப்படவில்லை. மனைவிக்கோ கடுமையான நோயாக இருந்தது.

**முஹம்மத் அஷ்ரப் போலர் சாஹிப் ஷஹீது.** இவர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீது** மர்ஹூமின் தாய் தந்தையர் லாஹூரைச் சேர்ந்தவர்கள். இவர்களது பாட்டனார் சிக்கந்தர் அஹ்மத் சாஹிப் முதலில் அஹ்மதியானார்.இவர் சவுத்ரி ஃபதஹ் முஹமமது சாஹிபின் பெரியப்பா ஆவார்.

மூதாதையர்களில் விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். 2004 -ல் உம்ரா செய்வதற்காக சென்றார். எல்லா சகோதரர்களையும் ஜமாஅத் பணியைச் செய்யுமாறு போதிப்பார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 47. வீட்டின் ஒரே பராமரிப்பாளராக இருந்தார். மார்டன் டவுண் பள்ளியில் **ஷஹாதத்** நிகழ்ந்தது. ஜுமுஆவை முறையாக தொழுது வருவார். சம்பவத்தன்று மஸ்ஜித் நூரின் ஹாலில் இருந்தார். ஹாலில் சின்ன கதவை இடுப்பை வைத்து கதவைமூடியவாறு தாங்கி கொண்டார். தீவிரவாதி அறைக்கு வெளியில் நின்று கதவைத் தள்ளினான். பிறகு துப்பாக்கியால் கதவை நோக்கி சுட்டான். அதில் குண்டுகள் அறைக்குள் சென்றது; அதில் **ஷஹீதா**கி விட்டார். தஃவத்தே இலல்லாஹ்வில் ஆர்வம் உள்ளவர். தனது பகுதியில் தனது நேர்மை, கண்ணியத்தின் காரணத்தால் பிரபல்யமானவராக இருந்தார். ஜமாஅத் அல்லாத சிலரும் கூட இவரது ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டனர்.

மே 30-ல் பத்திரிகையில் செய்தி வந்தது. அஹ்மதியல்லாதவர்களும் இவரது ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்ட செய்தியைப் பார்த்த முல்லாக்கள் இவரது ஜனாஸாவில் கலந்து கொண்டவர்களின் நிகாஹ் முறிந்து விட்டது என்று அறிவித்தார்கள். Express T.V. -யில் இந்த செய்தி வந்து கொண்டிருந்தது. இந்த மவ்லவிகள் வந்து ஜனாஸா தொழுவது மிகமிக தூரமான விஷயம். ஆனால் இரங்கல் தெரிவித்தவர்கள், ஜனாஸா தொழுதவர்களின் நிகாஹ்வை முறித்து விட்டு அமர்ந்திருக்கின்றனர்.

வீட்டினர் கூறுகின்றனர்: உம்ரா செய்த பிறகு தஹஜ்ஜுத் தொழுகையை முறைப்படி நிறைவேற்றி வந்தார். திருக்குர்ஆன் ஓதுமாறு மற்றவர்களைத் தூண்டினார். பிள்ளைகளிடம் திருக்குர்ஆனைப் படியுங்கள். அது ஒரே ஒரு வரியாயினும் சரியே. ஆனால் பிறகு அதன் பொருளையும் படிக்க வேண்டும். இல்லையெனில் பிரயோஜனம் இல்லை என்று கூறுவார்.

**முகர்ரம் முபாரக் அஹ்மத் தாஹிர் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துல் மஜீத் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீது** லாஹூரைச் சேர்ந்தவர். இவரது தாய்வழிப்பாட்டி காதியானைச் சேர்ந்தவர். இவரது

தந்தையார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் காலத்தில் பைஅத் செய்தார். இவர் ஒரு வங்கில் டைப்பிஸ்ட்டாக இருந்தார். பணியிலிருந்தே B.A. & M.A படித்தார். பிறகு பாங்கில் பல்வேறு Courses படித்து பதவி உயர்வு பெற்று Vice President ஆக பணியாற்றினார். சீனியர் President உடைய பதவி உயர்வு கிடைக்கவிருந்தது. சிறந்த பணியாளர் என்ற பாங்கின் விருதும் இவருக்கு கிடைத்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 57. தாருஸ் ஸிக்ர் ஹல்காவில் தஃலீம் செயலராக பணி செய்து வந்தார். அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவர். சம்பவத்தன்று தனது இரு மகன்களுடன் ஜுமுஆவுக்கு மார்டன் டவுண் மஸ்ஜிதுக்கு வந்தார். மெயின் ஹாலின் பின்பக்கம் அமர்ந்து கொண்டார். இரு மகன்களும் மற்ற ஹாலில் அமர்ந்து கொண்டனர். துப்பாக்கி சூடு ஆரம்பமானதும் முரப்பி சாஹிப் துஆ செய்யுமாறு கூறினார். இவர் கையை உயர்த்தி துஆ செய்தார். துஆ செய்யும் இடது விலாப்புறத்தில் குண்டடி பட்டது. அடுத்த குண்டு இதயத்தின் அருகில் பாய்ந்தது. அதே இடத்தில் ஷஹீதாகி விட்டார்கள். இரக்க குணமுள்ளவர். தமது சக பணியாளர்களிடம் பழக்கம் இல்லை. தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களிடம் நல்ல நட்பு இருந்தது. தனது வீட்டையே தொழுகைக்குரிய இடமாக ஆக்கியிருந்தார். முதல் மாடியை தொழுகைக்குரிய இடமாகவே தயார் செய்திருந்தார். கிலாஃபத்துடன் பேரன்பு வைத்திருந்தார்.

அவரது மகன் கூறுகிறார்: ஜமாஅத் வேலையிலிருந்து இரவு 3 மணிக்கு திரும்பினாலும் எதுவும் சொல்லமாட்டார். ஆனால் வேறு ஏதாவது வேலைக்காக வெளியில் போய் விட்டு இஷா தொழுகைக்குப் பிறகு வீடு திரும்பினால் சத்தம் போடுவார். கண்டிப்பார்; தாராள மனப்பான்மை கொண்டவர். பெரிய பெரிய பொருள்களை கொடுத்து விடுவார்.

முரப்பிகள் (கொள்கை பரப்புனர்கள்) மீது மிகவும் பற்று இருந்தது. விருந்தோம்பல் செய்பவர். பழகுவதற்கு எளியவர். தனது வீட்டையே ஜமாத்தின் செயலகமாக்க முயன்று வந்தார்.

**முகர்ரம் அனீஷ் அஹ்மத் சாஹிப் ஷஹீத்.** இவர் முனீர் அஹ்மத் சாஹிப் சகோதரரின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹுமின் குடும்பம் பைசலாபாத் மாவட்டத்தில் இருந்தது. அங்கிருந்து லாஹூருக்கு குடிபெயர்ந்தது. மெட்ரிக் படிப்புக்கு பிறகு Computer hardware செய்து கொண்டிருந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 35. வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது.

ஜுமுஆவுக்காக எப்போதும் பொதுவாக மார்டன் டவுண் செல்வார். சம்பவ தினத்தன்று பள்ளியில் இருந்து வெளியேறி ஜுமுஆவுக்காக தாருஸ் ஸிக்ர் பள்ளிக்குச் சென்றார். தனது தந்தையாருடன் மிஹ்ராபுக்கு அருகில் அமர்ந்திருந்தார். துப்பாக்கி சூடு தொடங்கியதும் தந்தையார் இவரை ஒளிந்துகொள்ளுமாறு கூறினார். தந்தையிடம், நீங்கள் ஒளிந்திருங்கள். நான் மக்களுக்கு உதவி செய்யப் போகிறேன் என்று கூறினார். மனைவி,மக்கள் மீது நல்ல பேரன்பு கொண்டவர். தந்தையாருக்கு மிகவும் கீழ்ப்படிபவர். மனைவியின் உறவுகளிடம் சகோதர மனப்பானமையுடன் பழகினார். தொண்டு செய்வதில் ஆர்வம் உள்ளவர். ஓரிடத்தில் ஓர் அஹ்மதி நண்பருக்கு accident ஆகிவிட்டது. உடனே இரத்தம் கிடைக்கவில்லை. தமது இரத்தத்தை கொடுத்தார். பிறகு சிகிச்சைக்காக நண்பர் பணம் கடனாக கேட்டதும் ரூபாய் 5,000 அளவுகான தொகையை கொடுத்தார். ஆனால் திரும்ப வாங்கவில்லை. தனது மகன் ஒழுங்காக திருக்குர்ஆன் வகுப்பிற்கு அனுப்பி விடுவார். ஜமாத் பணிகளில் ஆர்வமாக பங்கேற்பார். சம்பவத்தின் போது இவரது தம்பி முனவ்வர் அஹ்மத் ஸாஹிபும் ஷஹீதாகியுள்ளார்.

**முகர்ரம் முனவ்வர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** முகர்ரம் சுபேதார் முனீர் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார்.

இவரும் தனது அண்ணனைப் போன்று பைசலாபாத்தைச் சேர்ந்தவர். பிறப்பு அஹ்மதிதான். ஆனால் சில காலம் ஷியா கொள்கையினால் ஈர்க்கப்பட்டிருந்தார். இவரது தாய்வழிப்பாட்டியினால் வளர்க்கப்பட்டார். பிறகு தானே ‘பீர்’ (முதகுரு) ஆகிவிட்டார். அவ்வேளையில் அவரது கனவில் இமாம் ஹுஸைன், ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோர் வந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மையை எடுத்துரைத்தனர். பிறகு இரண்டாம் முறை பைஅத் செய்தார். செயல்திறனுள்ள தொண்டராக இருந்தார். நல்ல இயல்பு இருந்ததால் அல்லாஹ்வே இவருக்கு வழிகாட்டினான். அஹ்மதிய்யத் பற்றி நன்றாக தெரிந்து வைத்திருந்தார்.

மற்றவர்களுக்கு தப்லிக் செய்து வந்தார். அதிகமான நபர்களை பைஅத்தும் செய்ய வைத்துள்ளார். தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் வழியில் அழைத்தல்) பணியில் ஆர்வம் உள்ளவர். மவ்லவிகளை வாயடைக்கச் செய்பவர். **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 30. துணை இஸ்லாஹ்-வ-இர்-ாத் செயலராக பணிசெய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவராவார். தாருஸ் ஸிக்ரில் இவரது **ஷ**ஹாதத் நடந்தது.

தாருஸ் ஸிக்ரில் தாக்குதல் நடைபெற்ற போது வெளியில் உள்ள கேட்டில் துப்பாக்கி சூடு நடக்கும் சப்தத்தைக் கேட்டார். இவர் தந்திரமாக வெளியில் வந்து பிறகு உடனே கதவைமூடினார். ஹாலில் உள்ள main gate-யும் மூடினார். அதே வேளையில் தொடர்ந்து வீட்டிற்கு போன் தொடர்பு வைத்திருந்தார். தமது சச்சாவிடம் துஆவுக்காக கூறினார். நான் மேலே போகிறேன் எனக்காக துஆ செய்யுங்கள் என்றார். பார்த்தவர் ஒருவர் கூறும் போது துப்பாக்கி சூடு நடக்கும் போது ஆரம்பத்திலேயே ஹாலுக்குள் வந்தார்கள். எவரிடமாவது ஆயுதம் இருந்தால் தந்து விடுங்கள் என்று கூறினார். ஜுமுஆ தொழ மக்கள் வந்தார்களே தவிர ஆயுதங்களை கொண்டு வரவில்லை. அதன்பிறகு துப்பாக்கி சூட்டினால் மக்கள் காயமுற்றனர். தீவிரவாதி ஹாலில் இருந்து மேலே சென்றான். அந்த சந்தர்பத்தில் மக்களுக்கு இவர் தண்ணீர் புகட்டினார். காவல்துறையும் இதைத்தான் ஆட்சேபனையாக வைக்கின்றனர். அரசும் இதைத்தான் கேட்கிறது. ஏன்? நீங்கள் ஆயுதம் வைத்துக் கொள்ளவில்லை? என்கின்றனர். ஆயுதம் வைத்துக் கொண்டிருப்பது அஹ்மதியல்லாதவர்களின் வேலை. அஹ்மதிகள் ஆயுதம் வைப்பதில்லை. எவ்வாறிருப்பினும் போலிஸ் கை உயர்த்தி விட்டது. உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டது. எனவே தொடர்ந்து கண்காணித்து வாருங்கள். தீவிரவாதிகளை பிடியுங்கள்.

கடைசியாக அவர் தீவிரவாதிகளை பிடித்தார். அவன் தன்னிடம் இருந்த குண்டை வெடிக்கச் செய்துவிட்டான். இதில் குண்டு வெடித்ததில் இவர் **ஷ**ஹீதானார். தனது சகோதரர் அனீஸ் அஹ்மத் சாஹிப் மரித்து விட்டார் என்பதை இவர் முதலிலேயே தெரிந்துகொண்டார். இருந்தும் மக்களுக்கு உதவி செய்து வந்தார். இவரது வீட்டின் சுவரில் எப்போதும் எதிரிகள் நமக்கு எதிராக போஸ்டர்களை ஒட்டி வந்தனர். **ஷ**ஹீத் மர்ஹூம் இவ்வாறு போஸ்டர் ஒட்டும் சிறுவர்களை மிகவும் அன்புடன் புரிய வைத்தார். சிறுவர்களிடம் அதற்கு நல்ல தாக்கம் ஏற்பட்டது. ஆனால் பெரியவர்களின் சொல்லை மீற முடியாமல் மீண்டும் அதனை செய்யும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள்.

இஸ்லாஹ்-வ-இர்**ஷா**த் செயலர் கூறுகிறார்: சம்பவத்திற்கு ஒன்றரை மாதம் முன்பு இவர் என்னிடம் ஒரு கனவை கூறினார். கனவில் இவரது மரணித்த தாயாரை சந்திக்கிறார். நான் உனது அறையை தயார் செய்து விட்டேன். உம்மை அழைப்பேன் என்று கூறுகிறார். ஹாபிஸ் முஸஃப்பர் அஹ்மத் கூறுகிறார்: இவர் தனது உறவினர்களிடம் முன்னரே கூறியிருந்தார். அது மட்டுமின்றி கடந்த வருடம் திருமணம் நடந்தது. முதல் நாளே தனது மனைவியிடம், நான் **ஷ**ஹீதாகப் போகிறேன். நான் **ஷ**ஹீதான பிறகு புலம்பக் கூடாது என்று கூறினார்.

**முகர்ரம் ஸயீது அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் சூபி முனீர் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். இவரது ஜனாஸா காயிபை நான் இன்று தொழுவேன். இவரது மூதாதையர்கள் கர்னால் (பாரத்) மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவரது தந்தைவழி கொள்ளுதாத்தா ஹஸ்ரத் ரமலான் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு சர்கோதாவில் குடியேறினார். குடும்பம் லாஹூரில் இருந்தது. **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 37. பைத்துந்நூர் மஸ்ஜிதில் **ஷ**ஹீதானார். ஜுமுஆ நாளன்று வேலையிலிருந்து நேராக ஜுமுஆவுக்குச் சென்றார். மஸ்ஜித் பைத்துந் நூரில் இவர் சென்றடையும் முன்பே மஸ்ஜிதில் துப்பாக்கிச் சூடு தொடங்கி விட்டது. இரு தீவிரவாதிகள் பள்ளிக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்திருந்தனர். அதிலிருந்து பாய்ந்தவாறு பள்ளிக்குள் வந்தனர். சில நிமிடங்களில் மோட்டார் சைக்கிள் வெடித்தது. இவர் அருகில் நின்றார். இதனால் நெருப்பு பிடித்தது. இவரும் எரிந்து விட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.8 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார். ஆனால் ஜூன் 5-ம் தேதி மருத்துவமனையில் **ஷ**ஹாதத்தின் பானத்தைக் குடித்தார். **ஷ**ஹாதத்தின் ஒரு நாள் முன்பு தனது ஊரிலிருந்த தங்கைக்கு போன் செய்து ஒரு தேக்கா உணவு சமைத்து விநியோகித்து விடு. நான் ஒரு

கனவில் கண்டேன் என்று கூறினார். ஆனால் அல்லாஹ்வுடை நாட்டம் இவ்வாறு இருந்துள்ளது. ஜுமுஆ நாளில் தனது குழந்தைகளை அன்பு காட்டி விரைவாக பணிக்கு வெளியேறினார். பிறகு அங்கிருந்து ஜுமுஆ தொழுவதற்காக மஸ்ஜித் நூர் வந்தார்.

மர்ஹூமின் மனைவி சில டைரிகளை காட்டினார். அதில் சில விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. ஷஹாதத் எனது இலட்சியம் இன்ஷா அல்லாஹ் என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் யா அல்லாஹ்! எனக்கு ஷஹாதத்தின் வாய்ப்பைக் கொடு! இந்த கழுத்து உனது வழியில் துண்டாகட்டும்! என்று எழுதப்பட்டுள்ளது. எனது உடல் உன் வழியில் துண்டு துண்டாகட்டுமாக! எனது எஜமானனே! எனது துஆவை ஏற்றுக் கொள்! ஆமீன் என்று எழுதி வைத்துள்ளார்.

அல்லாஹ் இவரது துஆவை ஏற்றுக் கொண்டும் விட்டான். 30.11.2009 -ல் இதனை எழுதியுள்ளார். டைரியில் தொழுதது, ஜுமுஆ தொழுதது, ஜுமுஆ குத்பாவில் சிறு குறிப்புகள், சந்தா கொடுத்த விபரங்கள, மற்ற செலவு விபரங்கள் உள்ளன. பெற்றோர், உறவினர்களுடன் மிகவும் அன்புடன் நடந்து கொள்வார். தக்ததாரு என்ற ஊரைச் சேர்ந்தவர். அவ்வூரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அங்கும் ஷஹாதத்துகள் 4-5 வருடங்கள் முன்பு நடந்துள்ளன. அவர்களுக்கு துஆ செய்வதற்காகவும் அதில் எழுதியுள்ளார். ஏழைகளுக்கு சதகா கொடுப்பார். சிரித்த முகம். அன்பு நேசம் கொண்டவர். பெற்றோர், தங்கை, மனைவி, சகோதரர் எல்லாரின் மீதும் கவனம் உண்டு. ஒரு டப்பா வைத்து அதில் தினமும் சிறு தொகையை வைத்து வருவார். தமது கிராமத்திற்கு போகும் போது அங்கு தேவை உள்ளவர்களுக்கு அதனை கொடுப்பார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. எல்லா ஷஹீதாக்களின் தகுதியையும் உயர்த்துவானாக. இந்த எல்லா தியாகிகளும் விதவிதமான சிறப்புகளுக்கு சொந்தக்காரர்கள். தமது மனைவி மக்களுக்காக இவர்கள் கொண்ட விருப்பங்களை நிறைவேற்றுவானாக. இவர்கள் அனைவருக்கும் இந்த அதிர்ச்சியைத் தாங்கக்கூடிய தைரியத்தை வழங்குவானாக! இந்த விஷயம் வருங்காலத்திலும் தொடரும்.

**முகர்ரம் டாக்டர் முஹம்மத் ஆரிப் சாஹிப் ஷஹீது.** வாழ்வை அர்ப்பணித்தவர். டாக்டர் முகர்ரம் சாதிக் சாஹிப் தர்வேஷ் காதியானின் மகன் ஆவார். இவரும் தர்வேஷ் தான். காதியானைச் சேர்ந்தவர் ஆவார். 13 ஜுன் 2010-ல் தமது 53வது வயதில் வஃபாத் ஆனார்கள். 30 வருடங்களாக ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். நல்ல முறையில் பணி செய்து வந்தார். முதலில் துணை வக்ஃபே ஜதீத் செயலராக இருந்தார். நாயிப் நாஸிர் பைத்துல் மால் செயலராகவும், நஷ்ர்-வ-இர்ஷாத் செயலராகவும் இருந்தார். 1995 பைத்துல் மால் காரிஜ் செயலராக நியமிக்கப்பட்டார். மரணம் அடையும் வரை இதே பொறுப்பை வகித்து வந்தார். இதுவன்றி 8 வருடமாக நாஸிம் தஃலீம் செயலராக இருந்தார். 6 வருடம் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத் ஆக இருந்தார். பிறகு இந்தியாவின் துணை சதர் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வாக இருந்தார். 1993 -ல் ஜல்ஸா ஸாலானா காதியான் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மிகச் சிறந்த முறையில் இக்கடமையை ஆற்றினார். 2005 -ல் நான் காதியான் சென்ற போது இவர் தான் ஜல்ஸா ஸாலானா அதிகாரியாக இருந்தார். மிகவும் முயற்சி செய்து தனது பணியை செய்து வந்தார். இவரது உடல்நிலை சற்று மோசமாகவே அப்போது இருந்தது. இரத்தக் கொதிப்பு இருந்தது. மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் காலத்திலும் அதற்குப் பிறகும் நாஸிர் அஃலாவின் இடத்திலிருந்து பணியாற்றியுள்ளார். மியான் சாஹிப் வஃபாத் ஆன பிறகு உள்ளூர் துணை அமீராக நான் நியமித்தேன். சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா தவிர தஹ்ரீகே ஜதீத், வக்ஃபே ஜதீத், மஜ்லிஸ் கார்பர்தாஸ் கமிட்டியின் மெம்பராகவும் இருந்தார். அதுபோன்று நூர் மருத்துவமனை கமிட்டியின் சதர் ஆகவும் இருந்தார். பல சேவைகள் செய்துள்ளார். இவர் உருதுவில் M.A. படித்த பிறகு குருநானக் பல்கலைக்கழகத்தில் Ph.D பெற்றார். தஹஜ்ஜுத் தொழுபவர். கிலாஃபத்துடன் பேரன்பு, விசுவாசம் உள்ளவர். தூய்மையானவர்; நல்ல கனவுகளைப் பெறுபவராக இருந்தார். தனது மனைவியிடம் எனது நேரம் நெருங்கி விட்டதாக தெரிகிறது. எனவே தயாராக இருக்க வேண்டும் என்று கூறி வந்தார். முதலில் இவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டது.நீண்ட நாள் டயாலிஸிஸ் செய்து வந்தார். வேறு சிறுநீரகம் மாற்றப்பட்டும் நிலைமை சீரடையவில்லை. நீண்ட நாள் நோய்களை சகித்து வந்தார். பொறுமையாக இருந்தார். பிறகு இருதயத்தில் infection ஆனது. அவரை நான் எப்போதும் சிரித்த முகத்துடன் கண்டுள்ளேன். 1991-ல் நான் சாதாரண தொண்டனாக இவருடன் ஜல்ஸா ஸாலானாவில் டூட்டி கொடுத்துள்ளேன். அப்போதும் நான் எனது கிலாஃபத்திலும், அதற்கு முன்பும் பார்த்துள்ளேன். இவரது கண்களில் நல்ல அன்பு பொங்கிக்

கொண்டிருந்தது. நல்ல முயற்சி செய்து டூட்டி கொடுப்பார். ஆபிசர் முன்பும் நல்ல கட்டுப்படுதல் இருந்தது. 1991 –ல் சில வேளை சில வேளை டூட்டியின் போது இவரிடம் ஆபிசர்கள் சற்ற வரம்பு மீறி நடந்ததாக உணர்ந்தேன். அப்போதும் நெற்றி சுருங்கியதில்லை. முழுமையாக கட்டுப்பட்டவாறு அதனை பெற்றுக் கொள்வார். தவறுகள் நடந்தாலும் நான் இந்த வேலையை செய்யவில்லை என்று ஒருபோதும் சொன்னதில்லை. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

இந்த இருவருக்கும் அதாவது லாஹூர் தாக்குதலில் காயமுற்று ஜுன் 5 ம் தேதி ஷஹீதானவருக்கும் இவருக்கும் இன்று ஜனாஸா தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 11.06.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Reviewed by : Moulvi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456